துறையிலே தொழில்கள் இருக்கின்றன. இவை இரண்டுக்கும் மையமாக ஏன் ஜாயின்ட் செக்டார் என்று விடக்கூடாது என்பது தான் இந்த அரசாங்கத்தின் அழுத்தமான கருத்து. கொள்கை களைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் இந்த வாதங்கள் கிளம்பியிருக் கின்றன. ஐம்பது கோடி ரூபாயில் தூத்துக்குடி உரத் தொழிற்சாலை நடக்கிறது என்றால், அதை அரசாங்கமே ஏன் ஏற்று நடத்தக் கூடாது என்று கேட்கிறார்கள். அதைக் காட்டிலும் குறிப்பிட்ட தொழில்களைத் தனியார் துறையும் நாமும் நிர்வாகத்திலே பங்கு பெறுகிற அடிப்படையிலே செய்யவேண்டியது இப்போது இருக்கிற குழப்பமான மிக்சட் எகானமியில் பொருளாதார அடிப் படையாக அமைந்திருக்கிறது. அதை அரசாங்கம் நழுவ விடுவ தாக இல்லை.

சேலம், தருமபுரி மாவட்டங்களுக்கிடையே வருவாய்த் துறை அலுவலர்கள் பிரிவினை

* 196. வின.—திரு. க. முருகேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டத்திலிருந்து தருமபுரி மாவட்டம் பிரிந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் வருவாய்த்துறைப் பணியாளர் களை மட்டும் இவ்விரண்டு மாவட்டங்களுக்கிடையே பிரிவினை செய்ய அரசாங்கம் இன்னும் ஆணையிடாதது ஏன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சேலம், தர்மபுரி மாவட் டங்களிடையே வருவாய்த் துறை அலுவலர்களை நிரந்தரமாகப் பிரித்துக் கொடுக்கும் கருத்துருவின் மீது அரசாணை எண் 417, வருவாய்த் துறை, தேதி 10—2—1970-ல் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

திரு. க. முருகேசன் : தலைவர் அவர்களே, இதனால் தர்மபுரியில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதைப்பற்றி அரசாங்கம் கவனித்ததா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு முடிவு வருகிற நேரத்திலே சில பேர் பாதிக்கப்பட்டதாகச் சொல்லுவார்கள், சில பேர் அனுகூலப்பட்டதாகச் சொல்லுவார்கள். தர்மபுரி மாவட்ட கலெக்டர், சேலம் மாவட்ட கலெக்டர், ரெவின்யூ இலாகா செயலா ளர் தலைமையில் கூடி, இரண்டு பேரும் மன நிறைவு பெறும்படியான ஒப்பந்த அடிப்படையில்தான் இம்முடிவு மேற்கொள்ளப் பட்டிருக் கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)